24.07.2025 S.C.No.138 of 2017 P.W.53 – Chandrasekaran

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1 to A5 present. A6 absent and his absence condoned as u/s 317 Cr.P.C. petition filed and allowed.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 02.20 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: அ.த.சா.ஆ.88 ஆவணத்தின் முதல் பக்கத்தில் 3வது வரியில் Medical records and documents of the concerned patients sent in original என்று சொல்லப்பட்டுள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: அதே ஆவணத்தில் 2வது பக்கத்தில் AE ward memo book from 15.06.2015 to 28.06.2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட AE ward memo book ல் குறிப்பிட்டுள்ளவாறு போலீசார் intimation–ஐ யார் வாங்கியது என்று அந்த Memo book–ஐ பார்த்தால்தான் தெரியும் என்றும் ஆனால் அதை வேண்டும் என்றே இந்த வழக்கிற்காக மறைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால்?

ப: சரியல்ல.

கே: அ.த.சா.ஆ.78 ல் Medical report of Shameel Basha IP.No.4913/MLC ல் முதல் பாராவில் 4 வது வரியில் "Assaulted by one known person Pallikonda Police Inspector on 18.06.2015" என்று உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: மேற்கண்ட Memo–ல் எத்தனை காயங்கள் இருந்ததாக மருத்துவரால் குறிப்பிடப்பட்டுள்து என்றால்?

ப: மூன்று காயங்கள்.

கே: மேற்கண்ட அதே Medical report ல் 3 வது பாராவில் "On the next day 20.06.2015 patient was not found in accident and emergency ward during ward round by Cheif Medical Officer later found in male ward" என்று உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: மேற்கண்ட Medical Report ல் பாரா 3 ல் On the next day 20.06.2015 என்ற இடத்தில் ஏதேனும் நேரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று பார்த்து சொல்லுங்கள்?

ப: இல்லை.

கே: Later found என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எப்போது கண்டுப்பிடிக்கப்பட்டார் என்ற நேரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: 19.06.2015 முதல் 20.06.2015 மாலை 04.00 மணி வரை இறந்துபோன ஷமீல் பாஷா எவருடைய பொறுப்பில் இருந்தார் என்பது குறித்து விசாரணை செய்து ஆவணங்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறீர்களா?

ப: ஆவணங்கள் இல்லை. மேற்படி நபர் இறந்துபோனதால் எங்கிருந்தார் என்று தெரியவில்லை.

கே: மேற்கண்ட AE ward ன் மருத்துவரையோ, பாதுகாவலரையோ, செவிலியரையோ ஷமீல் பாஷா காணாமல் போனது குறித்து விசாரித்து ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: மேற்கண்ட Medical report–ல் 3 வது பாராவில் 2 வது வரியில் "On examination patient was conscious" என்று உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: 20.06.2015 மாலை 04.00 மணிக்கு இருந்ததாக அ.த.சா.ஆ.48 ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: அ.த.சா.ஆ.48 ல் 04.00 P.M. என்று அடித்தல் திருத்தலுடன் எழுதப்பட்டுள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: எ.த.சா.ஆ.6 ல் 11 வது தாளில் தொடக்கத்தில் During rounds patient not found in ward என்று எழுதியிருக்கும் இடத்தில் நேரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: அ.த.சா.ஆ.48 ல் நேரம் குறிப்பிட்டுள்ளது என்றும், எ.த.சா.ஆ.6 ல் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: அ.த.சா.ஆ.48 ல் 20.06.2015 என்று எழுதி 04.00 P.M. என்று எழுதி அதில் பல்வேறு மருந்துகள் கொடுத்ததாக உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: எ.த.சா.ஆ.6 ல் மேலே சொன்ன மாதிரி பல்வேறு மருந்துகள் கொடுத்ததாக பதிவுகள் ஏதும் இல்லை என்றால்?

ப: எ.த.சா.ஆ.6 ஆவணத்தில் அவ்வாறான பதிவுகள் இல்லை.

கே: அ.த.சா.ஆ.48 ல் 21.06.2015 என்று எழுதி இடதுபுறத்தில் ஆறு சொற்களும், நடுவில் கோடிட்டு எட்டு சொற்களும் வேறு சில தகவல்களும் மற்றும் வலதுபுறத்தில் மருந்துகள் கொடுத்ததாக தகவல்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: எ.த.சா.ஆ.6 ல் 21.06.2015 என்று எழுதி இடதுபுறத்தில் இரண்டு சொற்களும், வலதுபுறத்தில் ஐந்து சொற்களும், வலதுபுறத்தின் இறுதியில் ஒரே ஒரு சொல் மட்டும் எழுதி மருந்துகள் கொடுத்ததாக எந்த தகவலும் பதிவிடப்படவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: மேற்கண்டவாறு அ.த.சா.ஆ.48 ல் எ.த.சா.ஆ.6 லும் உள்ள வேறுபாடான பதிவுகள் குறித்து குறிப்பிட்ட மருத்துவரிடம் விசாரித்து அதற்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறீர்களா?

ப: எ.த.சா.ஆ.6 ஆவணம் குறித்து என்னால் எதுவும் கூற முடியாது. எ.த.சா.ஆ.6 ஆவணம் குறித்து நான் எந்த விசாரணையும் மருத்துவரிடம் செய்யவில்லை.

கே: டிஎஸ்பி கணேசன் அவர்களிடம் இந்த மருத்துவ ஆவணங்கள் ஏதேனும் ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து பெற்று என்றேனும் விசாரணை செய்தீர்களா என்று தாங்கள் விசாரித்து

அந்த தகவலை இந்த நீதிமன்றத்தில் கொடுத்திருக்கிறீர்களா என்றால்?

ப: இல்லை.

கே: Accident and Emergency ward ன் மருத்துவர் மற்றும் அதன் பொறுப்பாளர்கள் அனைவரிடமும் இறந்துபோன ஷமீல் பாஷா 20.06.2015 அன்று மாலை 04.00 மணி வரை Male ward ல் இருந்தார் என்று கூறுவதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்று கேட்டு அதனை ஆவணமாக்கி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்?

ப: இல்லை.

கே: உங்களால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற அறிக்கையில் 7 வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேலிருந்து 5 வது வரியில் Rope என்றும், Pulley என்றும் இரண்டு பொருள்களை குற்ற சம்பவத்திற்காக பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட அந்த பொருட்களை கைப்பற்றி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: அ.த.சா.ஆ.26 (கைப்பற்றுதல் மகசர் 01.07.2015) மேற்கண்ட Rope, Pulley ஆகியவை கைப்பற்றப்பட்டதாக உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: 06.07.2015 (அ.த.சா.ஆ.41)ல் மகசரில் மேற்கண்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: தங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்ற அறிக்கையின் பக்கம் 6 ல் 2 வது பாராவில் கடைசி இரண்டு வரியில் ஷமீல் பாஷா In a illegal custody என்று இருக்கிறது என்றால்?

ப: சரிதான்.

கே: In which Crime Number Shameel Basha was brought to Pallikonda Police Station on 16.06.2015?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 140/2015.

கே: மேற்கண்ட குற்ற எண் 140/2015 வழக்குக்கோப்பில் ஷமீல் பாஷா எத்தனை நாள் போலீஸ் கஸ்டடியில் இருந்தார் என்று குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன என்றால்?

ப: எத்தனை நாட்கள் என்று குறிப்புகள் இல்லை.

கே: யார் யார் ஷமீல் பாஷாவை விசாரித்தார்கள் என்ற குறிப்பாவது மேற்கண்ட குற்ற எண் 140/2015 வழக்குக்கோப்பில் குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: மருத்துவர்களால் கொடுக்கப்பட்ட மருத்துவ தகவல்களின் அடிப்படையில் 19.06.2015 மாலை 04.30 மணி முதல் 22.06.2015 வரை ஷமீல் பாஷா சுயநினைவோடு இருந்தார் என்று அ.த.சா.ஆ.88 ல் குறிப்பிட்டிருக்கும்போது 16.06.2015 அன்று 04.30 மணி முதல் சுயநினைவோடு இருந்த ஷமீல் பாஷாவிடமிருந்து எவ்வித வாக்குமூலமும் எவராலும் பெறப்படவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: 26.06.2015 என்று தேதியிட்ட அலி அக்பர் அவர்களினுடைய புகார் மனு (எ.த.சா.ஆ.5) சிபிசிஐடியிடம் கோவிந்தசாமி ஆய்வாளர்

அவர்களால் கொடுக்கப்பட்டதா என்றால்?

ப: அசல் சிபிசிஐடியிடம் கொடுக்கப்படவில்லை. நகல் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது.

கே: அசல் புகாரினை (26.06.2015) நீதிமன்றத்திற்கும் நகலினை சிபிசிஐடிக்கும் கொடுக்கச்சொல்லி உயர் அதிகாரிகளிடமிருந்தோ அல்லது நீதிமன்றத்திடமிருந்தோ ஏதேனும் ஆணைகள் உள்ளதா என்றால்?

ப: இல்லை. குற்ற எண் 158/2015 வழக்குக்கோப்பை சிபிசிஐடிக்கு உத்தரவுப்படி ஒப்படைத்தபோது அந்த கோப்பில் அதன் நகல் இணைக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்பாகவே அசல் ஆவணத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார்.

கே: 01.07.2015 கோவிந்தசாமி ஆய்வாளரால் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட ஆவணங்களின் வரிசை எண் 16 ல் குறிப்பிடப்பட்டுள்ள K.M.அலி அக்பர் புகார் மனு (முதல் புகார் மனு) மீது ஏதேனும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: குற்ற எண் 158/2015 பதிவு செய்யப்பட்டுள்ள புகாரில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்?

ப: தேதி குறிப்பிடப்படவில்லை

கே: குற்ற எண் 158/2015 பதிவு செய்யப்பட்டுள்ள K.M.அலி அக்பரின் புகாரானது யாருக்கு முகவரியிடப்பட்டுள்ளது?

ப: காவல் துணை கண்காணிப்பாளர், நகர காவல் நிலையம், ஆம்பூர்.

கே: ஆம்பூர் நகர காவல் கண்காணிப்பாளரின் சுருக்கொப்பமோ

அல்லது கையொப்பமோ ஏதேனும் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: தேதியிடப்பட்ட 26.06.2015 ன் K.M.அலி அக்பரின் புகார் இருக்கிறபோது தேதியிடப்படாத ஒரு புகாரினை எந்த சூழலில் பெறப்பட்டது என்றும், ஏன் முதல் புகாரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ப்படவில்லை என்றும் விசாரித்து அதன் உண்மை தன்மையை ஆவணங்களின் மூலம் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா ?

ப: ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை.

கே: குற்ற எண் 158/2015 பதிவு செய்த ஆய்வாளர் கோவிந்தசாமி அவர்களால் பதிவு செய்யப்பட்ட K.M.அலி அக்பரின் கு.வி.மு.ச. பிரிவு 161(3) வாக்குமூலத்தில் "நடவடிக்கை எடுக்கச்சொல்லி ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் வந்திருந்த பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் வேப்பங்குப்பம் காவல் ஆய்வாளராகிய தங்களிடம் புகார் கொடுத்தேன்" (எ.த.சா.ஆ.16) என்று உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: தேதியிடப்படாத புகாரினை பெற்று குற்ற எண் 158/2015 பதிவு செய்த ஆய்வாளர் கோவிந்தசாமி அவர்கள் "இன்று 27.06.2015 ம் தேதி 00.15 மணிக்கு மனுதாரர் K.M.அலி அக்பர் என்பவர் கொடுத்த புகாரினை பெற்று" (அ.த.சா.ஆ.1) என்று உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: குற்ற எண் 158/2015 பதிவு செய்த கோவிந்தசாமி ஆய்வாளர் அவர்கள் K.M. அலி அக்பர் என்பவரிடமிருந்து பதிவு செய்த கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் "அந்த புகார் கொடுத்த உடனே த.மு.மு.க கட்சியை சேர்ந்த ஆம்பூர் எம்எல்ஏ அஸ்லம் பாஷாவுடன் இருக்கும் த.மு.மு.க முக்கிய பொறுப்பில் உள்ள ஷமீல் அகமத் என்பவர் யாருடைய பேச்சையோ கேட்டுக்கொண்டு சிறிய துண்டுச்சீட்டில் எழுதியிருந்த பெயர்களை சேர்த்து எழுதி கொண்டு வந்து ஒரு கையில் பிடித்துக்கொண்டே அதில் என்னை கையெழுத்து போடச்சொல்லி என்னை கட்டாயப்படுத்தி கையெழுத்து போட வைத்தனர்" என்று உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: மேற்கண்ட கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள த.மு.மு.க முக்கிய பொறுப்பில் உள்ள ஷமீல் அகமத் என்பவரை விசாரித்து ஏன் கட்டாயப்படுத்தி அலி அக்பரிடம் புகாரில் கையெழுத்து வாங்கினீர்கள் என்று விசாரித்து அதற்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: K.M.அலி அக்பரால் 26.06.2015 தேதியிட்ட புகாரும் தேதியிடப்படாத புகாரும் இந்த நீதிமன்றத்தில் உள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: அப்படியானால் இரண்டு புகார்கள் இந்த நீதிமன்றத்தில் அலி

அக்பரால் கொடுக்கப்பட்டதாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: 19.06.2015 மதியம் 01.00 மணிக்கு மேல் Bind over எழுதிக்கொடுத்துவிட்டு ஷமீல் பாஷாவை அவரது மாமனார் கௌஷ் பாஷா நல்ல முறையில் அழைத்துச்செல்கிறேன் என்று எழுதிக்கொடுத்துவிட்டு அழைத்துச்சென்ற பிறகு இறந்துபோன ஷமீல் பாஷா எந்த சூழலிலும் காவல் துறையினரினுடைய கட்டுப்பாட்டில் இல்லை என்றால்?

ப: சரிதான்.

கே: தாங்களால் 11.12.2017 அன்று, இறந்துபோன வழக்கின் எதிரி முனியன் அவர்களால், தாக்கல் செய்யப்பட்ட Discharge Petition மீது தாங்கள் கொடுத்த பதிலுரை, பிரமாண வாக்குமூலத்தில் பாரா எண் 12 ல் 1ம் எதிரி துணை கண்காணிப்பாளர் கணேசன் அவர்களிடம் 28.05.2015 முதல் 19.06.2015 வரை பணியில் இருந்தார்கள் என்பதை உறுதி செய்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சின்னபையன் என்பவரின் கொலை தொடர்பாக நியமிக்கப்பட்ட தனிப்படையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட CMP 4365/2017 என்ற Dischage petition க்கு தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனுவுரை பாரா 12 எ.ம.த.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கே: தங்களது குற்ற அறிக்கையில் பக்கம் 6 ல் 4 வது பாராவில் Police Quarters என்று ஒரு சொல்லை பயன்படுத்தியுள்ளீர்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: அந்த Police Quarters ன் எண் என்ன என்றால்?

ப: சார்பு ஆய்வாளருக்கான குடியிருப்பு.

கே: அவ்வாறு கூறுவதற்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: அந்த Police Quarters ஐ சட்டப்படி சோதனை (House search) செய்தார்களா என்றால்?

ப: டிஎஸ்பி சோதனை செய்துள்ளார்.

கே: அந்த Police Quarters–ஐ சோதனை செய்வதற்காக நீதிமன்றத்தில் அனுமதி பெற்றீர்களா?

ப: முன் தகவல் அறிக்கை அனுப்பியுள்ளார்.

கே: அந்த சார்பு ஆய்வாளரின் Quarters யாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் ?

ப: அது பயன்படுத்தப்படாத நிலையில் இருந்ததால் அது யாருக்கும் ஆவணப்படி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

கே: அப்படியானால் Quarters allotment register என்ற ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: டிஎஸ்பி அவர்கள் தங்களுக்கு முன்பாக புலன் விசாரணை அதிகாரியாக இருந்தவர் தங்களால் குறிப்பிடும் Quarters–ஐ சோதனை செய்வதற்கு முன் 1ம் எதிரியிடமிருந்து அந்த Quarters னுடைய சாவியை பெற்றதாக ஏதேனும் ஆவணம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: அப்படியானல் அந்த Quarters ன் சாவி எவரிடமிருந்தது என்றால்?

ப: தெரியவில்லை. வீட்டை சோதனை செய்த டிஎஸ்பி

யாரிடமிருந்து பெற்றார் என்ற விவரமும், வீடு திறந்திருந்ததா என்ற விவரமும் சோதனை ஜாபிதாவில் குறிப்பிடவில்லை.

கே: அ.சா.23 ஓய்வு பெற்ற துணை தாசில்தார் அவரின் சாட்சியத்தில் காவல் எழுத்தர் முத்துக்குமரன் அந்த வீட்டின் பூட்டை திறந்து வழி விட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அப்படியானால் தங்களால் குறிப்பிடப்படும் Quarters ன் முழு பொறுப்பும் முத்துக்குமரன் என்பவரிடம்தான் இருந்தது என்றம், 1ம் எதிரிக்கும் தங்களால் கூறப்படும் குடியிருப்புக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்?

ப: சாட்சியத்தில் அவ்வாறு அந்த சாட்சி குறிப்பிட்டுள்ளார்.

கே: கைப்பற்றுதல் மகசரை நான் சரிபார்த்தேனா என்றால்?

ப: பார்வையிட்டேன்.

கே: அதில் கைப்பற்றியதாக குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் 1ம் எதிரிக்கு தொடர்புடையது என்று நிபுணரின் கருத்துரை பெற்று அதன் அறிக்கையையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்?

ப: நிபுணரின் கருத்துரை எதுவும் பெறவில்லை.

கே: கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் செல்போன் மற்றும் சிம்கார்டுகள், மெமரி கார்டு ஆகியவைகள் 1ம் எதிரிக்கு தொடர்புடையது என்பதற்கான ஆய்வறிக்கை பெற்று இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறீர்களா ?

ப: இல்லை.

கே: தங்களின் குற்ற அறிக்கையில் சம்பவம் எங்கு நிகழ்ந்தது என்று தெளிவாக குறிப்பிடவில்லை என்றால்?

ப: குறிப்பிடப்பட்டுள்ளது.

கே: அப்படியானால் குற்ற அறிக்கையில் எந்த பாராவில் குறிப்பிட்டுள்ளீர்கள்?

ப: பக்கம் 6ல் பாரா 2ல் 5வது வரியில் பள்ளிக்கொண்டா காவல் நிலைய காவலர் குடியிருப்பில் நிகழ்ந்ததாக குறிப்பிட்டுள்ளேன்.

கே: அது உண்மை என்றால் அவ்விடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேனா என்றால்?

ப: நான் விசாரணைக்கு எடுப்பதற்கு முன்பே அந்த குடியிருப்பு இடிக்கப்பட்டுவிட்டதால் என்னால் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரிக்க முடியவில்லை.

கே: எனக்கு முன்பு புலன் விசாரணை மேற்கொண்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு. ஆனந்தகுமார் அவர்கள் அவ்விடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தாரா என்றால்?

ப: இல்லை.

கே: காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ஆனந்தகுமார் அவர்கள் வழக்கினை எடுத்துக்கொள்வதற்கு முன்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த கோவிந்தசாமி அவர்களால் தயாரிக்கப்பட்ட தோராய வரைபடம் (அ.த.சா.ஆ.80) ஐ பார்த்து சம்பவம் எங்கு நிகழ்ந்ததாக குறிப்பிட்டிருக்கிறார் என்று பார்த்து சொல்லுங்கள்?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு முன்பு சம்பவம் நடந்த இடமாக குறிப்பிட்டுள்ளார்.

கே: எதிரிகளால் எந்த சூழலிலும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் ஷமீல் பாஷாவையோ வேறு நபர்களையோ விசாரித்ததாகவோ குற்ற எண் 140/2015 வழக்குக்கோப்பில் ஏதும் குறிப்புகள் இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

ப: அந்த வழக்குக்கோப்பில் குறிப்புகள் இல்லை.

கே: ஷமீல் பாஷாவை விசாரணைக்காக குற்ற எண் 140/2015 ஷமீல் பாஷாவின் மாமனாரால் 16.06.2015 பள்ளிக்ொண்டா காவல் நிலையத்தில் ஒப்படைத்ததற்கு பின்னால் எதிரிகள் எவரும் ஷமீல் பாஷாவை விசாரித்ததாக குற்ற எண் 140/2015 வழக்குக்கோப்பில் இல்லாததால் ஒரு பொய்யான தகவலை உருவாக்கி இந்த நீதிமன்றத்தில் பொய்யான குற்ற அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: அப்படியானால் குற்ற எண் 140/2015 வழக்குக்கோப்பில் எதிரிகள் விசாரித்ததாக குறிப்புகள் உள்ளனவா?

ப: இல்லை.

கே: பொய்யான குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன் என்றால்?

ப: இல்லை.

கே: விபத்து பதிவேட்டில் மூன்று காயங்கள் என்றும் பிரேத பரிசோதனை அறிக்கையில் 18 காயங்கள் என்று குறிப்பிட்டுள்ளது குறித்தும் நல்ல முறையில் ஷமீல் பாஷாவை அழைத்துச்சென்ற அவரது மாமனார் கௌஷ் பாஷாவிடம் 19.06.2015 அன்று 01.00 மணியிலிருந்து மாலை 16.30 மணி

வரை எவ்வாறு காயங்கள் ஏற்பட்டன என்பதை விசாரித்து இந்த நீதிமன்றத்தில் ஆவணம் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: தனியாக ஆவணங்கள் ஏதும் இல்லை.

கே: 19.06.2015 இரவு (Absconding) தலைமறைவாகி 20.06.2015 மாலை 04.00 மணிக்கு வந்ததாக சொல்லும் மருத்துவர்களிடம் ஏன் புதியதொரு விபத்து பதிவு செய்யப்படவில்லை என்பதனை விசாரித்து ஆவணங்கள் சமர்ப்பித்திருக்கிறீர்களா என்றால் ?

ப: இல்லை.

கே: 19.06.2015 முதல் 20.06.2015 அன்று மாலை 04.00 மணி வரை Male ward ல் இருந்ததாக சொல்லப்படும் செய்தி குறித்து Male ward னுடைய மருத்துவர் மற்றும் பொறுப்பு அதிகாரிகளிடம் கேட்டு எவ்வாறு Male ward க்கு வந்தார் ஏன் வந்தார் யார் கொண்டு வந்து ஒப்படைத்தது யார் Male ward லிருந்து விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவிற்கு கொண்டு போய் விட்டது என்பதை விசாரணை செய்து அதற்கான ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்?

ப: இல்லை.

கே: 20.06.2015 காலை கௌஷ் பாஷா ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு சென்று ஆய்வாளரை சந்தித்து ஷமீல் பாஷா AE ward ல் இருப்பதாக சொல்லும்போது ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளர் அவனைதான் நாங்கள் தேடிக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னதாக இந்த நீதிமன்றத்தில் உள்ள ஆவணங்கள் சாட்சியங்கள் கூறும்போது அது குறித்து தாங்கள் ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளரிடமோ அல்லது ஷமீல் பாஷாவிடமோ

விசாரணை செய்து ஆவணம் தாக்கல் செய்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: ஷமீல் பாஷா AE ward ல் 20.06.2015 காலை இல்லாதபோது ஷமீல் பாஷா இருந்ததாக சொல்லிய அவரது மாமனார் கௌஷ் பாஷாவிடம் எதன் அடிப்படையில் ஷமீல் பாஷா மருத்துவமனையில் இருப்பதாக கூறினீர்கள் என்று விசாரித்து ஆவணம் தாக்கல் செய்திருக்கிறீர்களா என்றால்?

ப: இல்லை.

கே: தாங்கள் மேற்கண்டவாறு AE ward ல் 20.06.2015 அன்று காலை ஷமீல் பாஷா இல்லாத நிலையில் இருப்பதாக சொன்ன அவரது மாமனார் கௌஷ் பாஷாவிடம் தாங்கள் விசாரணை செய்திருந்தால் உண்மை வெளிவந்திருக்கும் என்றால்?

ப: சரியல்ல.

கே: கௌஷ் பாஷாவை விசாரிக்காமலேயே தலைமறைவான ஷமீல் பாஷாவுக்கு AR entry–ல் பதிவு செய்யப்பட்டுள்ள காயங்களுக்கு யார் காரணம் என்றும், விசாரிக்காமல் ஒரு பொய்யான குற்ற அறிக்கையை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: AR entry பதிவு செய்யப்பட்டுள்ள மூன்று காயங்களும் கௌஷ் பாஷாவால் ஏற்படுத்தப்பட்டதாக கருதி விசாரணை செய்தீர்களா?

ப: அந்த காயங்கள் அவரால் ஏற்படுத்தப்படவில்லை.

கே: அப்படியானால் 19.06.2015 அன்று 01.00 மணியிலிருந்து மாலை 16.30 மணி வரை நல்லமுறையில் அழைத்துச்சென்ற ஷமீல்

பாஷா யாருடைய பொறுப்பில் இருந்தார்?

ப: அவரின் மாமனார் கௌஷ் பாஷா பொறுப்பில் இருந்தார்.

கே: அப்படியானால் AR ல் entry செய்யப்பட்டுள்ள மூன்று காயங்கள் எவரால் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று கௌஷ் பாஷாவிடம் கேட்டு பதிவு செய்தீர்களா?

ப: அந்த காயங்கள் குறித்து குறிப்பிட்டு கேட்கப்படவில்லை. அவரின் வாக்குமூலத்தில் காவல் ஆய்வாளரிடம் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து அவர் கேட்டதாக சொல்லியுள்ளார்.

கே: கௌஷ் பாஷாவின் வாக்குமூலம் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்?

ப: 02.07.2015 அன்று.

கே: 19.06.2015 அன்று ஷமீல் பாஷாவால் கூறப்பட்டதாக சொல்லப்படும் தகவல்கள் குறித்து ஷமீல் பாஷா வாக்குமூலம் ஏதாவது தந்திருக்கிறாரா என்றால்?

ப: இல்லை.

கே: AR report–ல் (அ.த.சா.ஆ.47)–ல் குறிப்பிடப்பட்டுள்ள One known person (Pallikonda Inspector at 18.06) என்று குறிப்பிடப்பட்டுள்ளதை ஷமில் பாஷாதான் சொன்னார் என்று குறிப்பிட்டு பதிவிடப்பட்டுள்ளதா என்றால்?

ப: அவரால் சொல்லி பதிவிடப்பட்டுள்ளது. ஆனால் குறிப்பிட்டு அவ்வாறு வாசகம் இல்லை.

கே: அ.த.சா.ஆ.47 ஆவணம் ஷமீல் அகமது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: இறப்பு அறிக்கையில் யார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

ப: ஷமீத் பாஷா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கே: அ.த.சா.ஆ.53 ல் எல்லா ஆவணங்களிலும் ஷமீல் பாஷா என்று இல்லை என்றும், ஷமீத் பாஷா என்றுதான் உள்ளது என்றால்?

ப: Shameed Basha என்றும், அப்பா பெயர் ஷாஜகான் என்றும் உள்ளது. சாட்சி மீண்டும் கடைசி பக்கத்தில் Shameel Basha என்று உள்ளதாக சொல்கிறார்.

கே: Shameed Basha தான் Shameel Basha என்று மருத்துவர்களிடம் தனி அறிக்கை பெற்று சமர்ப்பித்துள்ளீர்களா என்றால்?

ப: இல்லை.

கே: விபத்து பதிவேட்டில் Shameel Ahmed என்று உள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: இந்த Shameel Ahmed என்ற பெயரை ஷமீல் பாஷா மருத்துவரிடம் சொல்லியிருக்க வாய்ப்பில்லை என்றும், வேறு யாரோ சொல்லி மருத்துவர் பதிவு செய்துள்ளார் என்றால்?

ப: அது பற்றி எனக்கு தெரியாது.

கே: குற்ற எண் 140/2015 ஷமீல் பாஷாவை எந்த சூழலிலும் எதிரிகள் தங்களின் குற்ற அறிக்கையில் கூறியிருப்பது போல விசாரிக்கவுமில்லை, சட்டவிரோதமாக தடுத்து நிறுத்தி வைக்கவுமில்லை என்றும் அதனால் ஒரு பொய்யான குற்ற அறிக்கையை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: குற்ற எண் 140/2015 ல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஷமீல் பாஷாவை 16.06.2015 முதல் 19.06.2015 அன்று 01.00 மணி

வரை பள்ளிக்கொண்டா காவல் நிலைய எஸ்எஸ்ஐ ரவிதான் விசாரணை அதிகாரியாக இருந்தார் என்றால்?

ப: அந்த வழக்கில் விசாரணை அதிகாரியாக அவர்தான் இருந்தார். Woman missing வழக்கை பொறுத்தவரை காவல் ஆய்வாளர்தான் விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று உள்ளது. இந்த வழக்கில் ஆட்கொணர்வு மனுவிலும் 1வது எதிர்மனுதாரராக 1ம் எதிரிதான் உள்ளார்.

கே: குற்ற எண் 140/2015 Woman missing வழக்கில் ஆட்கொணர்வு மனுவில் எஸ்எஸ்ஐ ரவிதான் ஆஜராகி அதற்கான விளக்கங்களை கொடுத்திருக்கிறார். அந்த ஆட்கொணர்வு மனுவை 1ம் எதிரியிடம் எஸ்எஸ்ஐ ரவி பார்வைக்காக வைக்கவில்லை அவரே அனைத்தும் செய்ததாக பதிவுகள் இருக்கின்றன அதனால் இந்த நீதிமன்றத்தில் 1ம் எதிரிக்கு எதிராக பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: அ.த.சா.ஆ.37 ல் எந்த இடத்திலும் 1ம் எதிரியிடம் ஆட்கொணர்வு மனு குறித்தோ அல்லது குற்ற எண் 140/2015ல் விசாரணை செய்தது குறித்தோ பதிவுகள் ஏதுமில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: தங்களின் குற்ற அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல் 1ம் எதிரியோ அல்லது பிற எதிரிகளோ Woman missing வழக்கில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட ஷமீல் பாஷாவை விசாரிக்கவுமில்லை, அவருக்கு எவ்வித காயங்களையும் ஏற்படுத்தவில்லை தாங்கள் இந்த நீதிமன்றத்தில் பொய்யான

ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: AR entry ல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று காயங்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளரால் உருவாக்கப்பட்டதாக சொல்லப்படுவதை 19.06.2015 முதல் 26.06.2015 வரை உயிருடனும், சுயநினைவுடனும் இருந்த ஷமீல் பாஷாவிடம் விசாரணை செய்து உறுதிபடுத்தாத நிலையில் இந்த நீதிமன்றத்தில் பொய்யான குற்றச்சாட்டினை புனைந்து கொடுத்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: தங்களின் குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல் எவ்வித காயங்களும் எதிரிகளால் ஏற்படுத்தப்படவில்லை அதனால்தான் எ.த.சா.ஆ.11 Bind over note நல்லமுறையில் அழைத்துச்செல்கிறேன் என்று எழுதிக்கொடுத்துவிட்டு அழைத்துச்சென்றுள்ளார் என்றும், ஆனால் வழக்கை பொய்யாக ஜோடிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு கௌஷ் பாஷாவிடம் கௌஷ் பாஷா சொன்னதாக கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலம் பொய்யாக தயாரித்து சமர்ப்பித்துள்ளேன் என்றால்?

ப: சரியல்ல.

கே: குற்ற எண் 140/2015 தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் 26.06.2015 பெற்றதாக மூன்று புகார்களை பெற்று அதற்கு குற்ற எண் 158/2015 என்ற முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து அதன் மீது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் அசல்

ஆவணங்கள் அல்ல என்றும், ஜெராக்ஸ் நகல்கள் மட்டுமே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் பல ஆவணங்கள் திருத்தப்பட்டு பொய்யான வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால்?

ப: சரியல்ல.

கே: மருத்துவ ஆவணங்கள் MLC வழக்கு தொடர்பாக அசல் ஆவணங்கள்தான் சட்டப்படி சமர்ப்பித்திருக்க வேண்டும் ஆனால் சட்ட விரோதமாக ஒளிநகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன, அதனால் அந்த ஆவணங்கள் செல்லத்தக்கது அல்ல என்றால்?

ப: சரியல்ல.

கே: தங்களின் புலன் விசாரணை 01.07.2015 அன்றே தொடங்கிய நிலையில் மருத்துவ சிகிச்சை பெற்றதற்கான அசல் ஆவணங்களை பெற்று இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், ஆனால் 26.06.2015 இறந்துபோன ஷமீல் பாஷா வழக்கினை குற்ற எண் 5/2015 ஐ பதிவு செய்த தாங்கள் உடனடியாக அசல் மருத்துவ ஆவணங்களை பெறாமல் ஒளிநகல்களை மட்டுமே பெற்று ஒரு பொய்யான வழக்கை ஜோடித்திருப்பதால் அந்த மருத்துவ ஆவணங்கள் செல்லத்தக்கது அல்ல என்றால்?

ப: சரியல்ல.

கே: 26.06.2015 மரணமடைந்த ஷமீல் பாஷாவின் மருத்துவ ஆவணங்கள் உடனடியாக மருத்துவமனையிலிருந்து பெறாமைக்கு உரிய காரணங்கள் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாததால் உண்மை ஆவணங்களை பெற்று அவைகளை மறைத்து இந்த நீதிமன்றத்தில் ஒளிநகல்களை

சமர்ப்பித்து பொய்யான வழக்கை ஜோடித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: வழக்கின் எதிரிகள் 28.05.2015 முதல் 19.06.2015 வரை அவர்களுக்கு மேல் அதிகாரியான ஆம்பூர் துணை கண்காணிப்பாளர் திரு.கணேசன் அவர்களோடு பணியாற்றியதை தெரிந்திருந்தும் எதிரிகளை ஷமீல் பாஷாவின் மரணத்திற்கு காரணமானவர்கள் என்று பொய்யான ஒரு குற்ற அறிக்கையை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: 26.06.2015 மாலை மரணமடைந்த ஷமீல் பாஷாவின் மரணத்தை அறிந்த அவரது மாமனார் த.மு.மு.க கட்சியின் முக்கிய பொறுப்பாளராக இருப்பதனால் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்ததை ஊடகங்கள் மூலமாகவும், பிற செய்திகள் மூலமாகவும் சாலையில் இறங்கி சாலை மறியல் செய்ததால் அந்த சிக்கலில் இருந்து தப்பிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு வழக்கின் எதிரிகளை இந்த வழக்கில் சேர்த்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல

கே: புலன் விசாரணை செய்து எதிரிகளை அடையாளம் கண்டீர்களா அல்லது த.மு.மு.க. உறுப்பினர்கள் கொடுத்த பெயர்களை குறிப்பிட்டு கொடுத்த புகாரினை நிராகரிக்க உரிமை இருந்தும் அரசியல் தலையீட்டால் எதிரிகளின் பெயர்களை சேர்த்தீர்களா என்பதை விளக்கி சொல்லுங்கள்?

ப: புலன் விசாரணையின் மூலம் எதிரிகள் அடையாளம் காணப்பட்டனர்.

கே: ஷமீல் பாஷாவிடம் யார் அவரை காயப்படுத்தினார்கள் என்று புலன் விசாரணை செய்யப்பட்டதா?

ப: இல்லை.

கே: 19.06.2015 முதல் 26.06.2015 வரை எதிரிகள் மீது காவல் நிலையத்திலோ அல்லது காவல் உயர் அதிகாரிகளிடமோ ஏன் புகார் கொடுக்கவில்லை என்று புலன் விசாரணை செய்தீர்களா?

ப: இல்லை.

கே: புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளின் பெயர்களை வைத்துக்கொண்டு அவர்களை குற்றப்படுத்தும் ஆவணங்களை தயார் செய்து பொய்யான வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: மருத்துவ ஆவணங்கள் ஆம்பூர் மருத்துவமனையிலிருந்து டிஎஸ்பி கணேசன் அவர்கள் பெற்றதற்கு பின்னால் சிபிசிஐடியால் மருத்துவரிடம் சொல்லி வழக்கை நிலைநிறுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு மருத்துவ ஆவணங்களை திருத்தி ஒரு பொய்யான வழக்கினை ஜோடித்து எதிரிகளின் மீது குற்ற அறிக்கை சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 அன்று 01.00 மணிவரை குற்ற எண் 140/2015 ல் விசாரணை அதிகாரியாக இருந்த எஸ்எஸ்ஐ ரவி அவர்களை விசாரணை செய்து முறையான ஆவணங்கள் நிலையத்தில் ஏன் பதிவு செய்யப்படவில்லை என்பது குறித்து விசாரித்து பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: குற்ற எண் 140/2015 ல் விசாரணைக்கு ஆஜரான ஷமீல் பாஷாவை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் 16.06.2015 முதல் 19.06.2015 வரை வைத்திருந்ததற்கான நிலையத்தில் உள்ள ஏதேனும் பதிவுகள் தங்களின் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனவா என்றால்?

ப: ஆவணங்களில் பதிவுகள் ஏதும் இல்லை.

கே: விசாரணைக்கு அழைத்துவரப்பட்ட ஷமீல் பாஷா நிலையத்தில் இருந்ததாக சொல்லப்படுவதை பொதுநாட்குறிப்பிலோ அல்லது விசாரணைக்கு வைக்கப்படும் நபர்களை குறித்து வைக்கும் பதிவேடுகளிலோ பதிவு செய்யாதது யாருடைய குற்றம்?

ப: பொதுநாட்குறிப்பை எழுதிய எஸ்எஸ்ஐ ரவியால் பதிவு செய்யப்படாதது அவருடைய பிழை.

கே: தங்களின் குற்ற அறிக்கையில் வழக்கு சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ள Cane, Rope, Pulley ஆகியவை எந்த புலனாய்வு அதிகாரியாலும் கைப்பற்றப்படாத நிலையில் எதிரிகளை வேண்டுமென்றே குற்றப்படுத்துவதற்காக தங்களால் புனைந்து பொய்யாக உருவாக்கப்பட்ட குற்ற அறிக்கை என்றால்?

ப: சரியல்ல.

கே: வழக்கு சொத்துக்களாக தங்களின் குற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்சொன்ன Cane, Rope, Pulley மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும பொருட்களும் எந்த சூழலிலும் எதிரிகளுக்கு தொடர்புடையதாக ஆவணங்களால் நிரூபிக்கப்படாத நிலையில் எதிரிகளின் மீது பொய்யான ஒரு குற்ற அறிக்கையினை சமர்ப்பித்திருக்கிறீர்கள்

என்றால் ?

ப: சரியல்ல.

கே: 19.06.2015 மருத்துவமனையின் AR entry பதிவு செய்யும்போது பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளரால் காயங்கள் உருவாக்கப்பட்டதாக பதிவிட்டிருப்பதை புலனாய்விற்கு எடுத்துக்கொண்ட கோவிந்தசாமி அவர்கள் உயிருடனும் சுயநினைவுடனும் இருந்த ஷமீல் பாஷாவிடம் 1ம் எதிரியை அழைத்துச்சென்று இவர்தானா அந்த ஆய்வாளர் என்று அடையாளம் உறுதிபடுத்தாத நிலையில் 1ம் எதிரியின் மீது ஒரு பொய்யான பிம்பத்தை உருவாக்கி அதற்கான பொய்யான ஆவணத்தை உருவாக்கி இந்த நீதிமன்றத்தில் பொய்யான குற்ற அறிக்கை சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: அப்படியானல் கோவிந்தசாமி அவர்களிடம் ஏன் 1ம் எதிரியை அழைத்துச்சென்று ஷமீல் பாஷாவிடம் காட்டி உறுதிபடுத்தவில்லை என்று கேட்டு வினா எழுப்பி அதற்கான ஆவணங்களை பதிவு செய்து இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா என்றால்?

ப: இல்லை.

கே: குற்ற எண் 140/2015 மற்றும் குற்ற எண் 158/2015 மற்றும் குற்ற எண் 5/2015 ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்றால்?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட மூன்று வழக்குகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பதால் முதன்முதலாக Woman missing வழக்கு குற்ற எண் 140/2015 பதிவு செய்த எஸ்எஸ்ஐ ரவி அவர்களின் (Call details) அழைப்பு விவரங்களை எடுத்து புலன் விசாரணை செய்தீர்களா?

ப: இல்லை.

கே: K.M.அலி அக்பரின் கோவிந்தசாமி ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட முதல் வாக்குமூலத்தில் த.மு.மு.க. எம்எல்ஏ அஸ்லம் பாஷா மற்றும் அவருடன் இருப்பதாக அலி அக்பர் கூறியுள்ள ஷமீல் அகமது ஆகியோரின் தொலைப்பேசி அழைப்பு விவரங்களை (CDR) தொலைத்தொடர்பு துறையிலிருந்து பெற்று ஆய்வு செய்தீர்களா?

ப: இல்லை.

கே: 19.06.2015 இரவு முதல் 20.06.2015 மாலை 04.00 மணி வரை ஷமீல் பாஷா உள்நோயாளியாக சேர்க்கப்பட்டிருந்த AE ward பொறுப்பாளர்களை விசாரித்து ஷமீல் பாஷா மேற்கண்ட நேரத்தில் எங்கிருந்தார் என்பதையும், எவருடைய கட்டுப்பாட்டில் இருந்தார் என்பதையும் புலன் விசாரணை செய்தீர்களா?

ப: இல்லை.

கே: ஆம்பூர் மருத்துவமனையில் பராமரிக்கப்படும் மருத்துவ ஆவணங்கள் குறிப்பாக Absconding intimation register, Medicine distribution register, Diet supply register ஆகியவைகளில்

பதியப்பட்டுள்ள குறிப்புகளை கைப்பற்றி அது குறித்து புலன் விசாரணை செய்தீர்களா?

ப: இல்லை.

கே: AR entry ல் மூன்று காயங்கள் அதன்பின் 19.06.2015 இரவு முதல் 20.06.2015 அன்று மாலை 04.00 மணி வரை என்று மருத்துவ ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதால் 19.06.2015 முதல் 20.06.2015 அன்று மாலை 04.00 மணி வரை அதிக எண்ணிக்கையிலான காயங்கள் ஏற்பட்டுள்ளது குறித்து மருத்துவமனை அதிகாரிகளிடமோ அல்லது Absconding ஆன ஷமீல் பாஷாவை தேடிக்கொண்டிருக்கிறோம் என்று கூறிய ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளரிடமோ புலன் விசாரணை செய்து அதிகப்படியான காயங்களுக்கு யார் பொறுப்பு என்ற கோணத்தில் புலன் விசாரணை செய்தீர்களா?

ப: இல்லை.

கே: தங்களின் குற்ற அறிக்கையில் 11 வது பக்கத்தில் முதல் பாராவில் கடைசி நான்கு வரிகளில் 1ம் எதிரி முதல் 7ம் எதிரிவரையிலானவர்கள் முடிவு செய்து ஷமீல் பாஷாவை சட்ட விரோத தடுப்பில் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு குற்ற எண் 140/2015 ன் வழக்குக்கோப்பில் பதிவுகள் ஏதும் உள்ளனவா?

ப: இல்லை.

கே: அதனால் எந்த சூழலிலும் 1ம் எதிரி முதல் 7ம் எதிரி வரை இறந்துபோன ஷமீல் பாஷாவை Illegal Custody ல் வைத்திருக்கவில்லை என்றும், ஆனால் ஒரு பொய்யான ஒரு குற்ற அறிக்கையை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல

கே: வழக்கின் எதிரிகள் எந்த இடத்தில் ஒன்றுகூடி இறந்துபோன ஷமீல் பாஷாவை காயப்படுத்தவேண்டும் என்றோ அல்லது சட்ட விரோத தடுப்பில் வைத்ததற்காக திட்டமிட்டார்கள் என்பதற்கான எந்த ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், எதிரிகள் மீது பொய்யான வழக்கை புனைந்து பொய்யான ஆவணங்களை தயார் செய்து பொய்யான ஆவணங்களை குற்ற அறிக்கையாக இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், அரசியல் தலையீட்டால் காவல் துறையினரின் தவறான வழிகாட்டுதலின் பெயரில் பொய்யான வழக்கு சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை முழுமையாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

**5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை பகுதியாக ஏற்றுக்கொண்டு 5 மற்றும் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 06.48 மணி**

M ELAVARASAN

Digitally signed by M ELAVARASAN
Date: 2025.07.24 19:02:56 +0530